Hand in hand with our artisans...

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்**

**759, அண்ணா சாலை, சென்னை – 600 002.**

# மக்கள் சாசனம் 2021

தமிழக கைவினைஞர்களின் நலனை உறுதி செய்யவும் கைத்திறத் தொழிலை மேம்படுத்தி முன்னேற்றவும் 1973ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, 'பூம்புகார்' என்ற வணிக பெயரில் புகழ் பெற்று விளங்கும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை இம்மக்கள் சாசனம் வெளிப்படுத்துகிறது.

**நோக்கம்**

தமிழக கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதோடு, அவர்களின் கடுமையான உழைப்பினால் பித்தளை, பஞ்சலோகம், மரம், கல், கலைத்தட்டுகள், தஞ்சாவூர் ஓவியங்கள், நெட்டி மாதிரிகள், காகிதக்கூழ், சுடுகளிமண் போன்றவற்றால் உருவாக்கப்பட்ட சிறப்புத்தன்மை வாய்ந்த கைத்திறப் பொருட்களை உலகம் முழுவதும் கொண்டு சேர்ப்பதே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும்.

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:–**

- தமிழ்நாடு கைவினைஞர்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்கைத் தரத்தை உயர்த்துதல்.
- கைவினைஞர்களின் திறனை மேம்படுத்த உரிய பயிற்சிகள் அளித்தல்.
- கைவினைஞர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.
- கைவினைப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துதல்.
- கைத்திறப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் கடினத்தன்மையை களைதல்.
- கைத்திறத் தொழிலில் உள்ள இடர்பாடுகளை குறைத்தல் / நீக்கல்.
- வடிவமைப்புகளில் புதுமையை ஊக்குவித்தல்.
- கைவினைஞர்களுக்கு சமூக பொருளாதார பாதுகாப்பு அளித்தல்.
- தமிழக கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்.
- கைத்திறத் தொழிலில் கைவினைஞர்களின் விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பை அங்கீகரித்தல்

**1. கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்துதல்**

பொது மக்களின் தேவைக்காக கைவினைஞர்களால் தயாரிக்கப்படும் பல்வேறு வகையான கைத்திறப் பொருட்களை தனது 12 விற்பனை நிலையங்கள், 10 துணை விற்பனை நிலையங்கள் வாயிலாகவும் மற்றும் உள்ளூர் பண்டிகைகள் மற்றும் முக்கிய

தருணங்களை ஒட்டி உள்ளூர், வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் நடத்தப்படும் பல்வேறு கண்காட்சிகளின் மூலமாகவும், இந்நிறுவனம் விற்பனை செய்து வருகிறது. பூம்புகார் விற்பனை நிலையங்களின் முகவரி, தொலைபேசி எண்கள் மற்றும் மின் அஞ்சல் முகவரி இணைப்பு 2ல் கொடுக்கப்பட்டுள்ளது.

கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் கைவினைஞர்கள் தங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை பூம்புகார் விற்பனை நிலையங்கள் மூலமாகவும் மற்றும் இக்கழகம் ஏற்பாடு செய்யும் பல்வேறு கண்காட்சிகளின் மூலமாகவும் விற்பனை செய்ய இணைப்பு 1 மற்றும் 2ல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அணுகலாம்.

சந்தை வாய்ப்பை மேலும் ஊக்குவிக்கும் விதமாக பூம்புகார் நிறுவனம் www.poompuhar.com என்ற வலைதளத்தினை துவக்கியது. மேலும் ஸ்மார்ட் போன் மற்றும் ஐபேட்களில் பூம்புகாருக்கென உருவாக்கப்பட்ட உயர்திறன் பயன்பாட்டினையும் (Hybrid App) துவக்கியுள்ளது.

3D வடிவமைப்பு மற்றும் அச்சு தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஒரு வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மையம் ஒன்றினை நிறுவியுள்ளது.

**அ) நகர்ப்புற கண்காட்சி திடல்கள்**

கைவினைஞர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு பெருநகரங்கள் / சுற்றுலாத் தலங்கள் போன்ற இடங்களில் நிரந்தர சந்தை வாய்ப்பிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது நகர்ப்புறக் கண்காட்சித் திடலின் முக்கிய நோக்கமாகும். இத்திடல் மூலம் கைவினைஞர்கள் தங்களது பொருட்களை ஆண்டு முழுவதும் விற்பனை செய்வதுடன் பெருமளவில் வாடிக்கையாளர்களை ஈர்க்க இயலும். இத்திடலில் விற்பனைக் கூடங்கள் உட்பட உள்நாடு / சர்வதேச சுற்றுலா பயணிகள் / நுகர்வோர்களை கவரும் வகையில் கலைநயத்துடன் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

**கன்னியாகுமரி**

பூம்புகார், கன்னியாகுமரியில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் ஒரு நகர்புறக் கண்காட்சித் திடல் அமைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சித்திடலில் 50 கடைகள், உணவுக்கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகனம் நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது. இந்நகர்புறக் கண்காட்சித்திடல் மூலம் மாதந்தோறும் சராசரியாக 50 கைவினைஞர்கள் பயன்பெறுகின்றனர்

**மாமல்லபுரம்**

மேலும், சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் ரூ.4.24 கோடி செலவில் மற்றுமொரு நகர்ப்புறக் கண்காட்சித்திடல் கட்டப்பட்டுள்ளது. இக்கண்காட்சி திடலில் விற்பனை செய்வதற்கு ஏற்ப 36 விற்பனை அரங்குகள், உணவுகூடம், ஓய்வறை, காட்சி

அரங்கம், குழந்தைகள் பூங்கா, கைவினைஞர்கள் தங்குமிடம் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகளைக் கொண்டுள்ளது.

**ஆ) ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டம்**

ஒன்றிய அரசு ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.10.19 கோடியினை பூம்புகாருக்கு அனுமதித்துள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.3.24 கோடி இணை மானியமாக தமிழக அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் கைவினைஞர்களுக்கு சிறந்த பணிச்சூழல், திறன் மேம்பாடு, சந்தை வசதி, புதிய வடிவமைப்புக்களை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி–
திட்ட முன்னேற்றம்

| வ. எண் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டம் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | செலவினத் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1. | பொது வசதி மையம் | 11 | 5.40 |
| 2. | கண்காட்சி | 22 | 3.13 |
| 3. | கிராப்ட் பஜார் | 12 | |
| 4. | வடிவமைப்பு கருத்தரங்கு | 27 | 1.23 |
| 5. | ஒருங்கிணைந்த பயிற்சி | 5 | 0.68 |
| 6. | உபகரணப் பொருட்கள் | 6,212 | 2.69 |
| 7. | உற்பத்தியாளர்/ நுகர்வோர் கூட்டம் | 1 | 0.11 |
| | **மொத்தம்** | | **13.24** |

மேற்கண்ட திட்டங்களின் மூலம் பயனடைய விரும்பும் கைவினைஞர்கள் இணைப்பு 1, 2 மற்றும் 3 இல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அணுகலாம்.

**இ) கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பு**

தமிழக அரசு மாநில புதுமை முயற்சி திட்டத்தின் கீழ் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பு களஞ்சியம் ஏற்படுத்த ரூ.1.00 கோடி நிதி வழங்கியுள்ளது. இது தமிழக கைவினைஞர்கள் அனைவருக்கும் நிலையான வடிவமைப்புடன்

ஒவ்வொரு கைவினைஞருக்கும் தனி மின் பக்கங்களை கொண்ட மேம்படுத்தப்பட்ட, புரிந்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட மின் தொகுப்பு ஆகும். இம்மின் தொகுப்பின் மூலம் குறைந்த வருவாய் உடைய கைவினைஞர்கள் உயர்வு அடைவார்கள். தற்போது இந்நிறுவனம் 19,052 கைவினைஞர்களின் விபரங்களை பதிவு செய்துள்ளது. இத்தொகுப்பில் கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் வாரியாகவும், சாதி மற்றும் பாலின வாரியாகவும் விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. இதன் மூலம் கணினியில் இக்கைவினைஞர்களின் விவரங்களைக் கண்டறிய முடியும். இந்த மின் தொகுப்பில் உறுப்பினராக இணைய www.poompuhar.com/artisan இணையதளத்தை தொடர்பு கொள்ளவும். இம்மின் தொகுப்பில் உறுப்பினராக இணைப்பு 2 மற்றும் 3 இல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அணுகலாம்.

**2. கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல்**

இக்கழகம், பித்தளை விளக்குகள், பஞ்சலோக சிலைகள், கலைத்தட்டுகள், மரச்சிற்பங்கள் மற்றும் கற்சிற்பங்கள் போன்றவற்றை தயாரிக்கும் உற்பத்தி நிலையங்களை நாச்சியார்கோவில், வாகைகுளம், மதுரை, சுவாமிமலை, தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் செயல்படுத்தி வருகிறது. உற்பத்தி நிலையங்களின் முகவரிகள், தொலைபேசி எண்கள், மற்றும் மின் அஞ்சல் முகவரிகள், இணைப்பு-3ல் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த உற்பத்தி நிலையங்கள் மூலமாக கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது. வேலை வாய்ப்பு தேடும் கைவினைஞர்கள் மேற்படி கைத்திறத் தொழில்களில் ஒன்றில் வாய்ப்பு பெற இணைப்பு 1 மற்றும் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களை அணுகலாம்.

**3. பயிற்சிகள்**

கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்யும் திறனை மேம்படுத்திக் கொள்வதற்காக இக்கழகம் 5 மாதம் / 2 மாதம் பயிற்சிகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நடத்தப்பட்டுள்ளது. இத்தகைய கைத்திறப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான திறமைகளைப் பெற ஆர்வமுள்ளவர்கள் காலமுறைதோறும் இக்கழகம் ஏற்பாடு செய்யும் பயிற்சித் திட்டங்களில் சேரலாம். இதன் மூலம் கைத்திறத் தொழில்களில் திறமைகளை வளர்த்துக்கொண்டு கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்வதை தொழிலாக மேற்கொள்ளலாம். பயிற்சிக் காலங்களில் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதந்தோறும் ரூ.7,500/- உதவித் தொகையாக இந்நிறுவனம் வழங்கியுள்ளது.

4. கைவினைஞர்களுக்கு பாராட்டு

அ) "வாழும் கைவினைப் பொக்கிஷம்" விருது

தமிழகத்தில் கைத்திறன் மேம்பாட்டுக்காக பங்களிப்பு செய்த 65 வயதுக்கு மேற்பட்ட திறன்மிகு கைவினைஞர்களுக்கு, "வாழும் கைவினைப் பொக்கிஷம்" என்ற விருது 2013–2014 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது தலா ரூ.1.00 லட்சம் ரொக்கப்பரிசு, 8 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழும் கொண்டதாகும். இவ்விருது ஆண்டுதோறும் 10 கைவினைஞர்களுக்கு ரூ.15.00 இலட்சம் செலவில் வழங்கப்பட்டு வருகிறது.

ஆ) பூம்புகார் மாநில விருது

தமிழகத்தில் கைத்திறன் மேம்பாட்டுக்காக பங்களிப்பு செய்த சிறந்த 10 கைவினைஞர்களை தேர்வு செய்து இந்நிறுவனம் வருடந்தோறும் பூம்புகார் மாநில விருதுகளை வழங்கி வருகிறது. இவ்விருதுகள் ரூ.50,000/– ரொக்க பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் தகுதிச் சான்றிதழும் கொண்டதாகும். இவ்விருது பெற்ற கைவினைஞர்கள் 60 வயது அடைந்தவுடன் பொருளாதாரத்தில் பின்தங்கியவராக இருக்கும் பட்சத்தில் இந்திய அரசால் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.3,500/– பெற தகுதி உடையவராகிறார்கள்.

இ) பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது

2011–2012 ஆம் ஆண்டு முதல் "பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது" என்ற விருது அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ரொக்கப்பரிசு ரூ.10,000/–, ஒரு வெள்ளி பதக்கம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும். ஒவ்வொரு ஆண்டும் 16 கைத்திறத் தொழில்களிலிருந்து 85 கைவினைஞர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. பெண் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்களுடைய சுய சார்பினை உறுதிப்படுத்தும் வகையிலும் மொத்த விருதில் 17 விருதுகள் பெண் கைவினைஞர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஈ) அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான போட்டி

தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க கைத்திறத் தொழில்கள் நீடித்திருக்கவும் அவற்றை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வதற்கும் இளைஞர்களை இத்துறையில் ஊக்கப்படுத்துதல் அவசியமாகிறது. இதனை செயல்படுத்தும் வகையில் 2013–2014–ஆம் ஆண்டு முதல் 30 வயதிற்குட்பட்ட இளம் கைவினைஞர்களுக்கு இக்"கைத்திறன்

போட்டி", அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போட்டியில் 150 கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ரூ.2,000/− ரொக்க பரிசு, வெள்ளிப் பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுகிறார்கள். இப்போட்டிகள் முக்கிய கைத்திறப் பொருட்களின் மையங்களில் நடத்தப்படும்.

**உ) கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது**

தமிழ்நாடு கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு "கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது" 2014−2015−ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ரூ.2.50 இலட்சம் செலவில் ஒவ்வோர் ஆண்டும் இரு நபர்களுக்கு வழங்கப்படும்.

இவ்விருது ரூ.40,000/− ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

**ஊ) குழு உற்பத்தி விருது**

கைவினைப் பொருட்கள் கைவினைஞர்களைக் கொண்ட ஒரு குழுவினரால் தயாரிக்கப்படுகிறது. இக்குழுவில் தனிப்பட்ட ஒரு கைவினைஞரை விருதுக்காக இனம் காண்பது கடினமான செயலாகும். எனவே ஒரு குழுவாக பணிபுரிந்து ஒரு பொருளைத் தயாரித்த குழுவினரை கௌரவிக்கும் நோக்கில் "குழு உற்பத்தி விருது" அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ஒவ்வொரு ஆண்டும் 3 குழுக்களுக்கு ரூ. 3.75 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது

இவ்விருது ரூ.40,000/− ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

**எ) பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது**

கைவினைஞர்களால் தயாரிக்கப்படும் பல கலைப்படைப்புகளும் பெரும்பாலும், அலங்காரம் சார்ந்தோ அல்லது மதம் சார்ந்தோ அமைகின்றன. எனவே பயன்பாடு சார்ந்த பொருட்களைத் தயாரிக்க கைவினைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில், "பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது" அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருது ஆண்டுதோறும் 3 கைவினைஞர்களுக்கு ரூ.3.75 இலட்சம் செலவில் வழங்கப்படுகிறது.

இவ்விருது ரூ.40,000/− ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

மேற்கண்ட ஏழு விருதுகளும் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட கைவினைஞர்களுக்கு வழங்கப்படுகிறது. விருதுகளுக்கான தகவல்களை பெற இணைப்பு–1ல் குறிப்பிடப்பட்ட அலுவலரை தொடர்பு கொள்ளலாம்.

**(ஏ) இந்திய அரசின் சில்ப் குரு விருது மற்றும் தேசிய விருது**

சில்ப் குரு விருது, இந்திய அரசினால் வருடந்தோறும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருது ஆகும். இதுவரை தமிழ்நாட்டைச் சார்ந்த **ஐந்து** தலை சிறந்த கைவினைஞர்களுக்கு சில்ப் குரு விருது வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்திய அரசு வருடந்தோறும் சிறந்த கைவினைஞர்களுக்கு தேசிய விருதுகளை வழங்கி வருகிறது. இவ்விருது ரூ.1.00 லட்சம் ரொக்கப் பரிசு, ஒரு தாமிரப் பத்திரம் மற்றும் ஒரு அங்கவஸ்திரத்தினை கொண்டதாகும். இவ்விருதுகள் மேதகு இந்திய குடியரசு தலைவர் அவர்களால் வழங்கப்படுவதாகும். இதுவரை தமிழ்நாட்டை சார்ந்த 28 சிறந்த கைவினைஞர்களுக்கு தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

**5. கைவினைஞர்கள் தினம்**

அழகிய கைத்திறப் பொருட்களின் மேல் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி பெருமளவு சந்தை வாய்ப்பினை அதிகரிக்கவும், வருடந்தோறும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுகளை ஒரே நாளில் தமிழகம் முழுவதும் வழங்கவும், கைவினைஞர்களை போற்றும் விதமாக தமிழ்நாடு அரசின் நிதியுதவி ரூ.35.00 இலட்சம் செலவில் ஒவ்வொரு ஆண்டும் "**மார்ச் 5–ஆம்**" நாள் "**கைவினைஞர்கள் தினமாக**" தமிழகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

**6. கைவினைஞர்களுக்கான நலத்திட்டங்கள்**

**கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல்**

- இந்நிறுவனம் தன்னுடைய உற்பத்தி நிலையங்கள் மூலமாக கைவினைஞர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினை அளிக்கிறது.
- இந்நிறுவனத்தின் சிறப்பு திட்டங்கள் வாயிலாகவும் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.
- இந்நிறுவனம் தனது விற்பனை நிலையங்கள், கண்காட்சிகள் மற்றும் மின் வணிகம் மூலம் கைவினைப் பொருட்களை விற்பனை செய்து வருவதன் மூலம், மறைமுகமாக கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி தருகிறது.

**7. கைவினைஞர்களுக்கு இலவச உபகரணங்கள் வழங்குதல்**

பூம்புகார் நிறுவனம், ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி திட்டத்தின் மூலமாக ரூ.5,000 மதிப்புள்ள இலவச உபகரணங்கள் 6212 கைவினைஞர்களுக்கு வழங்கி உள்ளது. கைவினைப்பொருட்கள் ஆணையர் (புதுடெல்லி) அலுவலகம் மூலம் வழங்கப்படும் கைவினைஞர் அடையாள அட்டை (Pechaan card) உள்ளவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றனர்.

**8. பொது பயன்பாட்டு மையங்கள்**

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி திட்டத்தின் மூலமாக 11 பொது பயன்பாட்டு மையங்கள் ரூ. 6.60 கோடி செலவில் சுவாமிமலை, தஞ்சாவூர், நாச்சியார்கோவில், வாகைக்குளம், மதுரை, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், அரும்பாவூர், தம்மம்பட்டி, ஆசனூர் மற்றும் அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று தமிழக அரசின் நிதி உதவியில் நலிந்த கைத்திறத் தொழில்களான பனை ஓலை, கோரைபாய், களிமண் மற்றும் சுடுகளிமண் ஆகிய கைத்திறத் தொழில்களில் ரூ. 1.88 கோடி செலவில் 4 பொது பயன்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த பொது பயன்பாட்டு மையங்களில் கைவினைஞர்களுக்கு தேவையான நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளது. எனவே தேவைப்படும் கைவினைஞர்கள் இலவசமாக பயன்படுத்தி கைவினைப் பொருட்களை துரிதமாக உற்பத்தி செய்து பயன் பெறலாம்.

**9. கைவினை சுற்றுலா கிராமம், மாமல்லபுரம் (Craft Tourism Village)**

ஒன்றிய அரசின் ஜவுளித்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அபிவிருத்தி ஆணையம் (கைவினைப்பொருட்கள்) சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் கைவினை சுற்றுலா கிராமம் என்ற ஒரு திட்டத்தை ரூ.5.61 கோடி செலவில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (பூம்புகார்) மூலம் அப்பகுதியிலுள்ள கைவினைஞர்கள் நலனுக்காகவும், சுற்றுலா மேம்பாட்டிற்காகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின் நோக்கம்**

மாமல்லபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள தொன்மையான மற்றும் நலிந்த கைவினைஞர்களின் குடியிருப்புகளை சீர்செய்து, மேம்படுத்தி

தேவைக்கேற்ப அழகுபடுத்தி அவர்கள் வசிக்கும் இடங்களை, சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலும், அவர்களிடம் நேரடியாக தொடர்பு கொள்ள வழிவகுத்திட இத்திட்டம் உருவாக்கப்பட உள்ளது. மேலும் மாமல்லபுரத்தை சுற்றியுள்ள கற்சிற்ப உற்பத்தி நிலையங்களை புதுப்பித்து / மேம்படுத்தி அங்கு வேலைபுரியும் கைவினைஞர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்து, அங்கு வருகை புரியும் சுற்றுலா பயணிகளிடம், கற்சிற்ப உற்பத்தி நிலைய உற்பத்தியாளர்கள் வணிகம் செய்திட இத்திட்டம் வழிவகை செய்யும். மேலும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் 40 அடி உயரத்தில் ஸ்தூபி ஒன்று மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

இதன் முதற்கட்டமாக ரூ.1.80 கோடி செலவில் மாமல்லபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

- காரணை கிராமத்தில் உள்ள கைவினைஞர்களின் குடியிருப்புகள் அழகுபடுத்துதல், வர்ணம் பூசுதல் மற்றும் மேம்படுத்துதல்
- ஐந்துரத வீதியில் உள்ள கைவினைஞர்களின் உற்பத்தி நிலையங்கள் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- மாமல்லபுரத்தின் நுழைவு வாயிலில் கைவினை சுற்றுலா கிராமத்திற்கான பிரமாண்டமான ஸ்தூபி அமைக்கப்பட்டு வருகிறது.
- கைவினை சுற்றுலா கிராமத்திற்கான விளம்பர பதாகைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பல்வேறு இடங்களில் அமைத்தல்.
- காரணை கைவினை சுற்றுலா கிராமத்திற்கான முகப்பினை அழகுபடுத்துதல்.

**இணைப்பு-1**

**தலைமை அலுவலகம்**

| வ.எண் | ஒப்பிய பொறுப்பு | அணுக வேண்டிய அதிகாரி | அலுவலக விலாசம்/மின் அஞ்சல் |
|---|---|---|---|
| 1 | சந்தை வாய்ப்பு ஆதரவு, கண்காட்சி மற்றும் மின் வணிகம் | விற்பனை மேலாளர் தொலைபேசி எண்<br>044-28518716 /(நேரடி)<br>28521325<br>28525094 | தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்,<br>759, அண்ணா சாலை,<br>சென்னை-600 002<br><br>மின் அஞ்சல்:-<br>tamilnaduhandicrafts@yahoo.co.in<br><br>மின்வணிகம் :-<br>www.poompuhar.com<br><br>இணையதளம்:-<br>www.poompuhar.com/tnhdc |
| 2 | உற்பத்தி | உற்பத்தி மேலாளர் தொலைபேசி எண்<br>044-28521325<br>28525094 | |
| 3 | கைவினைஞர்க்கான நலத்திட்டங்கள் மற்றும் விருதுகள் | உதவி மேலாளர் (மேம்பாட்டு பிரிவு)<br>044 -28521325/ 28525094 | |
| 4 | கைவினைஞர்கள் மற்றும் அவர்களின் திறமைக்கான மின் தொகுப்பு | உதவி மேலாளர் (தகவல் தொழில்நுட்ப பிரிவு)<br>044-28521827 (நேரடி)<br>044 -28521325/ 28525094 | |
| 5 | பொது தகவல் அலுவலர் | பணி மேலாளர்<br>044-28521271 / 28521325 | |

**இணைப்பு–2**

**விற்பனை நிலையங்கள்**

| வ.எண் | அலுவலக விலாசம் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 1 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>108, அண்ணா சாலை<br>சென்னை – 600 002<br>தொலைபேசி எண் 044 – 28520624 / 28550157<br>மின் அஞ்சல் –poompuharshowroom@gmail.com | மேலாளர் |
| 2 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>மேற்கு புலிவார் சாலை,<br>சிங்காரதோப்பு,<br>திருச்சி – 620 008<br>தொலைபேசி எண் 0431 – 2704895<br>மின் அஞ்சல் –poompuhartrichy@gmail.com<br>poompuhartrichy@hotmail.com | மேலாளர் |
| 3 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>மங்கம்மாள் சத்திர கட்டிடங்கள்<br>இரயில்வே சந்திப்பு எதிரில்,<br>12 மேற்கு வெளி வீதி,<br>மதுரை – 625 001<br>தொலைபேசி எண் 0452 – 2340517<br>மின் அஞ்சல்–poompuharmadurai@gmail.com | மேலாளர் |
| 4 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>இரயில்வே ஸ்டேஷன் சாலை,<br>தஞ்சாவூர் – 613 001<br>தொலைபேசி எண் 04362 – 230060<br>மின் அஞ்சல்–pssrtanjore@gmail.com | மேலாளர் |
| 5 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கடற்கரை கோயில் சாலை,<br>மாமல்லபுரம் – 603 104<br>தொலைபேசி எண் 044 – 27442224 | மேலாளர் |
| 6 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>அண்ணா பட்டு மாளிகை,<br>காதிகிராப்ட் பில்டிங்<br>திருவள்ளுவர் சிலை அருகில்<br>சேலம் – 636 001<br>தொலைபேசி எண் 0427 – 2414994<br>மின் அஞ்சல்– pssrsalem@gmail.com | மேலாளர் |

| வ.எண் | அலுவலக விலாசம் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 7 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>1239, பெரிய கடைவீதி,<br>கோயம்புத்தூர் – 641 001<br>தொலைபேசி எண் 0422 – 2391055<br>மின் அஞ்சல் – poompuharcbe@yahoo.co.in | மேலாளர் |
| 8 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>1154, மேட்டூர் சாலை,<br>ஈரோடு – 638 001<br>தொலைபேசி எண் 0424 – 2254885<br>மின் அஞ்சல்–poompuharerode@gmail.com | மேலாளர் |
| 9 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கலைமகள் இல்லம், சன்னதி தெரு,<br>கன்னியாகுமரி – 629 702<br>தொலைபேசி எண் 04652 – 246040<br>மின் அஞ்சல்–poompuharcape@gmail.com | மேலாளர் |
| 10 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>திரவலஞ்சுழி பிரதான சாலை<br>சுவாமிமலை – 612 302.<br>தொலைபேசி எண் 0435 – 2454442<br>மின் அஞ்சல்–papcswamimalai@gmail.com | மேலாளர் |
| 11 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>சி–1, ஸ்டேட் எம்போரியா காம்ப்ளெக்ஸ்,<br>இர்வின் சாலை, பாபா கரக் சிங் மார்க்,<br>புதுடெல்லி – 110 001<br>தொலைபேசி எண் 011 – 23363913<br>மின் அஞ்சல்– tnhandicrafts@yahoo.com | மேலாளர் |
| 12 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>கடை எண் 21–22 முதல் தளம்,<br>சி.ஐ.டி ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்,<br>எண் 2 காரியாஹாட் சாலை,<br>கொல்கத்தா – 700 068<br>தொலைபேசி எண் 033 – 24237028<br>மின் அஞ்சல் – pssrkolkata@gmail.com | மேலாளர் |
| 13 | பூம்புகார் விற்பனை நிலையம்<br>(கிளை விற்பனை நிலையம் கன்னியாகுமரி)<br>கடை எண் 139, சுவாமி நெல்லையப்பர் நெடுஞ்சாலை,<br>திருநெல்வேலி சந்திப்பு,<br>திருநெல்வேலி – 627 001.<br>தொலைபேசி எண் 0462 – 2333391<br>மின் அஞ்சல்–poompuharcape@gmail.com | மேலாளர் |

**இணைப்பு-3**

**உற்பத்தி நிலையங்கள்**

| **வ.எண்** | **அலுவலக விலாசம்** | **அணுக வேண்டிய அலுவலர்** |
|---|---|---|
| 1 | பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கல பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>நாச்சியார் கோவில் - 612 602<br>தஞ்சாவூர் மாவட்டம்<br>தொலைபேசி எண் 0435 - 2466553<br>மின் அஞ்சல் - bbmpnachiarkoil@gmail.com | மேலாளர்<br>(உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) |
| 2 | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>திருவலஞ்சுழி, பிரதான சாலை,<br>சுவாமிமலை - 612 302, தஞ்சாவூர் மாவட்டம்<br>தொலைபேசி எண் 0435 - 2454442<br>மின் அஞ்சல்-amtcswamilai@gmail.com | மேலாளர்<br>(உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) |
| 3 | பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கலப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>மன்னார் கோயில் அஞ்சல்,<br>அம்பாசமுத்திரம் (வழி)<br>வாகைக்குளம் - 627 413<br>திருநெல்வேலி மாவட்டம்<br>தொலைபேசி எண் 04634 - 250476<br>மின் அஞ்சல்- bmpcvagaikulam@gmail.com | மேலாளர்<br>(உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) |
| 4 | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>ரயில்வே ஸ்டேஷன் ரோடு,<br>தஞ்சாவூர் - 613 001<br>தொலைபேசி எண் 04362 - 236050<br>மின் அஞ்சல்-papcthanjavur@gmail.com | மேலாளர்<br>(உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) |
| 5 | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம்,<br>தொழிற்பேட்டை, மதுரை - 625 007<br>தொலைபேசி எண் 0452 - 2566774<br>மின் அஞ்சல்-pbapcmadurai@gmail.com | மேலாளர்<br>(உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) |
| 6 | பூம்புகார் சந்தன மரச்சிற்பங்கள் உற்பத்தி நிலையம்,<br>54-55 சிட்கோ தொழிற்பேட்டை,<br>கச்சிராப்பாளையம் சாலை,<br>கள்ளக்குறிச்சி - 606 202<br>தொலைபேசி எண் 04151 - 222508 | மேலாளர்<br>(உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) |
| 7 | பூம்புகார் கற்சிற்ப உற்பத்தி நிலையம்,<br>கடற்கரை கோயில் சாலை,<br>மாமல்லபுரம் - 603 104<br>தொலைபேசி எண் 044 - 27443224 | மேலாளர்<br>(உற்பத்தி மற்றும் விற்பனை பிரிவு) |

தமிழ் நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

**2021 ஆம் ஆண்டிற்கான மக்கள் சாசனம் (விருதுகள்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இத்திட்டத்தின் விவரங்கள் | பயனாளிகளுக்கு கிடைக்கும் உதவிகள் (ரூபாயில்) | உதவிகளைப் பெறுவதற்கு வேண்டிய தகுதிகள் | தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரி | விண்ணப்பம் செய்வதற்கான கால அட்டவணை |
|---|---|---|---|---|---|---|
| 1 | வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது | இவ்விருது 2013–2014 ஆம் ஆண்டு 65 வயதிற்கு மேற்பட்ட திறன்மிகு கைவினைஞர்–களுக்காக அறிமுகப்படுத்தப்–பட்டது. | இவ்விருது தலா ரூ.1.00 லட்சம் ரொக்கப்பரிசு, ஒரு தாமிரப்பத்திரம், 8 கிராம் தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும் | 65 வயதிற்கு மேற்பட்ட கைவினைஞர்கள் | உதவி மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு) | விருது குறித்தான அறிவிப்பு விளம்பரம் ஆண்டு தோறும் ஜூன் மாதம் வெளியிடப்படும் |
| 2 | பூம்புகார் மாநில விருது | தமிழகத்தில் கைத்திறன் மேம்பாட்டுக்காக பங்களிப்பு செய்த கைவினைஞர்களை தேர்வு செய்து இவ்விருது வழங்கப்படுகிறது. | இவ்விருது தலா ரூ,50,000/– ரொக்க பரிசு, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிர பத்திரம் மற்றும் தகுதிச் சான்றிதழ் கொண்டதாகும். இவ்விருது பெற்றவர் இந்திய அரசால் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் பெற தகுதி உடையவராகிறார். | 30 வயதிற்கு மேற்பட்ட கைவினைஞர்கள் | உதவி மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு) | விருது குறித்தான அறிவிப்பு விளம்பரம் ஆண்டு தோறும் ஜூன் மாதம் வெளியிடப்படும் |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இத்திட்டத்தின் விவரங்கள் | பயனாளிகளுக்கு கிடைக்கும் உதவிகள் (ரூபாயில்) | உதவிகளைப் பெறுவதற்கு வேண்டிய தகுதிகள் | தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரி | விண்ணப்பம் செய்வதற்கான கால அட்டவணை |
|---|---|---|---|---|---|---|
| 3 | பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது | கைவினைஞர்களை அங்கீகரித்து கௌரவப்படுத்துவதற்காக 2011–2012 ஆம் ஆண்டு முதல் பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது என்ற புதிய விருது அறிமுகப்படுத்தப்–பட்டது. | இவ்விருது ரூ.10,000/–, ரொக்கப்பரிசு, ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும், | மாவட்ட அளவில் மிகச்சிறந்த கைவினைஞர்கள். | உதவி மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு)) | விருது குறித்தான அறிவிப்பு விளம்பரம் ஆண்டு தோறும் ஜூன் மாதம் வெளியிடப்படும் |
| 4 | அடுத்த தலைமுறை கைவினைஞர் களுக்கான விருதுகள் | தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க கைத்திறத் தொழில்கள் நீடித்திருக்கவும் அவற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதற்கும் இத்துறையில் இளைஞர்களை ஊக்கப்படுத்துவது. | இவ்விருது ரூ.2,000/– ரொக்கப்பரிசு, வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும் | இவ்விருது 30 வயதிற்குட்பட்ட இளம் கைவினைஞர்கள் | உதவி மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு) | விருது குறித்தான அறிவிப்பு விளம்பரம் ஆண்டு தோறும் ஜூன் மாதம் வெளியிடப்படும் |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இத்திட்டத்தின் விவரங்கள் | பயனாளிகளுக்கு கிடைக்கும் உதவிகள் (ரூபாயில்) | உதவிகளைப் பெறுவதற்கு வேண்டிய தகுதிகள் | தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரி | விண்ணப்பம் செய்வதற்கான கால அட்டவணை |
|---|---|---|---|---|---|---|
| 5 | கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது | கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு வழங்கப்படுகிறது. | இவ்விருது ரூ.40,000/-, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும். | கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்பவர்கள். | உதவி மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு) | விருது குறித்தான அறிவிப்பு விளம்பரம் ஆண்டு தோறும் ஜூன் மாதம் வெளியிடப்படும் |
| 6 | குழு உற்பத்தி விருது | கைவினைப் பொருட்கள் ஒரு குழுவினரால் தயாரிக்கப்படுவதாகும். 3 குழுக்களுக்கு வருடந்தோறும் இவ்விருது வழங்கப்படுகிறது | இவ்விருது ரூ.40,000/-, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும். | ஒரு குழுவாக பணிபுரிந்து ஒரு பொருளைத் தயாரிக்கும் கைவினைஞர் குழு | உதவி மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு)) | விருது குறித்தான அறிவிப்பு விளம்பரம் ஆண்டு தோறும் ஜூன் மாதம் வெளியிடப்படும் |
| 7 | பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது | இவ்விருது பயன்பாடு சார்ந்த பொருட்களை தயாரிக்கும் கைவினைஞர் களுக்கு வழங்கப்படுகிறது. 3 நபர்களுக்கு வருடந்தோறும் இவ்விருது வழங்கப்படுகிறது. | இவ்விருது ரூ.40,000/-, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும். | பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்களை தயாரிக்கும் கைவினைஞர்கள். | உதவி மேலாளர் (மேம்பாட்டுப் பிரிவு) | விருது குறித்தான அறிவிப்பு விளம்பரம் ஆண்டு தோறும் ஜூன் மாதம் வெளியிடப்படும் |